# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)

செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)

Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100


பயிலரங்கத் தொடர் எண்ணிக்கை - 142 நாள்: 17.09.2026

## சுவடியியல் புலம்

**நடத்தும்**

## பயன்பாட்டு நோக்கில் தமிழ்ச் செவ்வியல் இலக்கண உரைகள்

## (Tamil Classical Grammatical Commentaries from an Applied Perspective)

## பயிலரங்கம் - 23

## (07.10.2026 - 13.10.2026)

## அறிவிப்பும் அழைப்பும்

தமிழிலக்கணம் மிகத் தொன்மையான வரலாற்றையும் பல்வேறு சிறப்புக் கூறுகளையும் கொண்டு விளங்குவதோடு மொழிக்கான கட்டமைப்பையும் வரைமுறைகளையும் வகுத்துள்ளது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்திலக்கணமாக விரிந்து படைக்கப்பட்ட இலக்கண நூல்கள் பழமையையும் புதுமையையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

இன்று தமிழில் கிடைத்துள்ள பழமையான, முழுமையான இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியத்திற்கு முன்பே இலக்கண மரபுகள் இருந்தமைக்கான சான்றுகளைத் தொல்காப்பியரே பல இடங்களில் சுட்டியுள்ளார். தொல்காப்பியம், நன்னூல், இறையனார்களவியல், நம்பியகப்பொருள், புறப்பொருள்வெண்பாமாலை, யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் முதலான இலக்கண நூல்களுக்கு உரையாசிரியர்கள் பலரும் உரையெழுதியுள்ளனர்.

உரையாசிரியர்களின் பணியானது நூல்களுக்கு உரை கண்டதோடு நின்றுவிடவில்லை. அவர்கள் பழைய இலக்கண நூல்களில் பிற்காலத்தவர் எழுதிச் சேர்த்த, திருத்திய, பொருந்தாப் பாடல்களையும், இடைச்செறுகல்களையும் ஆராய்ந்து நீக்கினர். ஏடு எழுதியவரால் நேர்ந்த பிழைகளையும் களைந்தனர்.

உரையாசிரியர்களின் துணை இல்லாவிடின் பழம்பெரும் நூல்களில் பொதிந்து கிடக்கும் கருத்து வளங்களை இன்று பெற முடியாமலேயே கடந்து வந்திருப்போம்.

மேற்சொன்னவாறு பழைய இலக்கண நூல்களின் உரை விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இக்காலப் பயன்பாட்டிற்குரிய பழைய உரைதோறும் காணப்படும் உரைத்தெளிவு, சொல்நயம், கருத்தாழம், பொருள் பகுப்பு என்பன போன்ற பல்வேறு பொருண்மைகளின் அடிப்படையில் ஆராய்ந்து நவீன ஆய்விற்குப் பயனளிக்கும் நோக்கில் இப்பயிலரங்கம் நடைபெற உள்ளது.

இப்பயிலரங்கில் தமிழ் இலக்கண அறிவும், வரலாற்றியல் தெளிவும், மொழியியல் புலமையும் ஒருங்கே பெற்ற அறிஞர் பெருமக்கள் பயிற்றுவிக்க உள்ளனர். தமிழியல், வரலாற்றியல், மொழியியல் ஆகிய துறைகளில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்கள் மட்டும் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது..

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை - 40
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 07.10.2026 முதல் 13.10.2026 வரை ஏழு நாட்கள்.
- பயிலரங்கு நேரம்: காலை 10.00 - 1.00 & மாலை 2.00 - 5.00.
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.

- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/4Bxh5PWXo5zmWBdP7 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR-code) மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 28.09.2026 (மாலை 05.00 மணி). காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 29.09.2026 அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் 28 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**